## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.79/2020

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.3 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 14.02.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமார் | ஜாதி | : |
| த/பெயர் | : வடிவேல் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

**வா.சா. 3 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான். நான் தாக்கல் செய்து நிரூபண வாக்குமூலத்தில் வாதி, பிரதிவாதியின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சீத்தாராமன் அய்யர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்றால் குன்னியூர் கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். ஆலத்தூர் கிராமத்தில் எத்தனை தெருக்கள் உள்ளது என்றால் 10 தெருக்கள் உள்ளது. ஆற்றிற்கு மேல்கரையில் தோப்புத்தெரு, ரோட்டுத்தெரு உள்ளது என்றால் சரிதான்.

2) வாதியின் அப்பா பெயர் என்னவென்று எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் மற்றும் என்ன வகைப்பாட்டை சேர்ந்தது என்ற விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். சீத்தாராமன் அய்யரிடம் வாதியின் தந்தையார் வேலை பார்த்தற்குண்டான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) கடந்த 20.08.2000-ல் பிரச்சனை நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யார், யார் பிரச்சனை செய்தார்கள் என்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். யார், யார் அந்த பிரச்சனையை தடுத்தார் என்பது குறித்தும் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் எந்த பிரச்சனையும் நடக்கவில்லை என்றாலும், வாதிக்கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சீத்தாராமன் அய்யர் எப்போது இறந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது ஒப்படைவு செய்யப்பட்டதற்குண்டான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து நாளதுதேதி வரையில் சிவசுப்ரமணியன் என்பவரின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், வாதியின் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.18 18:13:40 +0530

District Munsif

Mannargudi.